**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.338/2018**
**Deposition of witness for prosecution -PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. வேலு |
| Father Name | : | திரு. சின்னதம்பி |
| Village | : | தேவிபட்டிணம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | அரசு பணி ஒய்வு |
| Religion | : | இந்து |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of December 2021.

முதல் விசாரணை :-

நான் தற்போது தேவிபட்டிணத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1, 2 ஐயும் விபத்துக்குள்ளாகி இறந்த நபரையும் தெரியும் . கடந்த 15.07.2018 ஆம் தேதி இரவு 8.30 மணிக்கு தேவிபட்டிணம் ஊரணி கரையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது அம்பாசிட்டர் கார் வேகமாக வந்த போது நான் பயந்து கொண்டு மேலே ஏறிவிட்டேன். விபத்துக்குள்ளாகி இறந்த நபர் மீது அந்த கார் வேகமாக மோதிவிட்டு சென்றுவிட்டது. அவர் அம்மா என்று சத்தம் போட்டார். பின்னர் அந்த இடத்தில் கூட்டம் கூடிவிட்டது. அரசு மருத்துவமனை அருகே தான் விபத்தும் நடந்தது. அவர் இரவு 9.30 மணியளவில் இறந்துவிட்டதாக கூறினார்கள். காரை ஓட்டி வந்தவர்கள் யார் என்று பின்னர் விசாரணை செய்தபோது தான் ஆஜர் எதிரி என்று தெரிய வந்தது. இது சம்பந்தாக போலீசார் விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்துக்குள்ளாகி இறந்த நபர் எனக்கு என்ன உறவு முறை என்றால் அவர் என் ஊர்காரர். .அந்த பகுதியிலுள்ளவர்கள் அனைவரும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம் . எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதால் கையை நேராக நீட்டமுடியாது என்றால் இரவு நேரங்களில் மது அருந்துவேன். ஊரணி கரையில் விளக்குகள் உள்ளதா என்றால் உள்ளது- நான் எந்த துறையில் வேலை பார்த்தேன் என்றால் வருவாய் துறையில் வேலை பார்த்தேன். விபத்து நடந்த போது அங்கு வெளியாட்கள் யாராவது இருந்தார்கள் என்றால அது பற்றி எனக்கு தெரியாது. அன்று ஆறுமுகம் என்பவர் ரோட்டை கடந்து சென்றாரா என்றால் ஆமாம். அடிபட்ட இடம் தார் ரோடு என்றால் ஆமாம். அந்த இடத்தில் ரத்தம் இருந்ததா என்றால் இருந்தது. என்னை போலீசார் எப்போது விசாரணை செய்தார் என்றால் நான் காலை 7.30 மணிக்கு காவல்நிலையம் சென்றுவிட்டேன். எதிரி பெயரை யார் எனக்கு சொன்னது என்றால் போலீசார் சொன்னார்கள். அப்போது போலீசார் நான் சொல்ல சொல்ல எழுதி கையெழுத்து வாங்கினார்கள். நான் சொல்வது போல் ஊரணிக்கு செல்லவில்லை

என்றாலும் நான் குடித்துவிட்டு வீட்டில் இருக்கும் பழக்கம் உள்ளவர் என்றால் இல்லை. எனக்கு கை நடுக்கம் இருப்பதால் ஊரணி கரையில் ஏறி இறங்க முடியாது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எந்த வாகனத்தையும் இயக்கவில்லை என்றாலும் விபத்துக்குள்ளாகி இறந்த நபர் என் ஊர்காரர் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.338/2018**
**Deposition of witness for prosecution -PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சிவனேசன் |
| Father Name | : | திரு. செல்லம் |
| Village | : | தேவிபட்டிணம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | பெயிண்டர் |
| Religion | : | இந்து |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of December 2021.

முதல் விசாரணை :-

நான் தேவிபட்டிணத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐயும் விபத்துக்குள்ளாகி இறந்த நபரையும் தெரியும் . கடந்த 15.07.2018 ஆம் தேதி இரவு 8.30 மணிக்கு மலம் கழிப்பதற்காக நான் ஊரணி பக்கம் வெளியே சென்றேன். அப்போது சத்தம் கேட்டது. ஓடி வந்து பார்த்த போது என் தாத்தா ஆறுமுகம் விழுந்து கிடந்தார். அந்த சம்பவம் குறித்து நான் அ.சா.1 க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள். ஆம்புலன்சு வந்தது. பின்னர் விழுந்து கிடந்த என் தாத்தாவை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்பு இரவு 10 மணி போல் அவர் இறந்து விட்டதாக எனக்கு போன் வந்தது. இது சம்பந்தாக போலீசார் விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 16.07.2018 ஆம் தேதி காலை 11 மணிக்கு விசாரைண செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தபோது நான் தற்போது என்ன கூறினேனோ அதை தான் போலீசாரிடம் கூறினேன் என்றால் சரிதான். நான் அ.சா.1 க்கு போன் செய்தபோது அவர் எங்கிருந்தார் என்றால் அவர் எங்கிருந்தார் என்று தெரியவில்லை. ஆனால் 5 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது அ.சா.1 எங்கிருந்தார் என்றால் சம்பவ இடத்திலிருந்தார். அவரும் 108 ஆம்புலன்சில் சென்றாரா என்றால் ஆமாம். எனக்கு இந்த வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும் விபத்துக்குள்ளாகி இறந்த நபர் என் தாத்தா என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XX III Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
## RAMANATHAPURAM
## CASE NO: C.C.338/2018
## Deposition of witness for prosecution -PW-1

| | | |
|---|---|---|
| Name | : | திரு. உலகநாதன் |
| Father Name | : | திரு. ஆறுமுகம் |
| Village | : | தேவிபட்டிணம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | ஆசிரியர் பயிற்றுநர் |
| Religion | : | இந்து |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23$^{th}$ day of December 2021.

முதல் விசாரணை :-

நான் தேவிபட்டிணத்தில் வசித்து வருகிறேன். கடந்த 15.07.2018 ஆம் தேதி தேவிபட்டிணத்திலிருந்து ஒரு கி.மீ தள்ளி நின்று கொண்டிருந்தேன். அப்போது சிவனேசன் என்பவர் போன் செய்தார். தேவிபட்டிணம் அரசு மருத்துவமனை அருகே என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டிருப்பதாக தகவல் சொன்னார். தகவல் கேட்டவுடன் நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அதற்கு முனனரே அங்கு 108 ஆம்புலன்சு மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்கள். அவரை நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இரவு 8.30 மணிக்கு சென்று பார்த்தேன். அவர் சிகிச்சை பலனின்றி இரவு 9.30 இறந்து விட்டார். அது சம்பந்தமாக தேவிபட்டிணம் போலீசார் என்னிடம் வந்து புகார் வாங்கினார்கள். அது தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும புகார் தான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள் . நான் நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

தேவிபட்டிணத்தில் என் வீடு எங்கிருக்கிறது என்றால் காந்தி நகரிலுள்ளது. நான இராமநாதபுரம் வட்டார வளர் மையம் அரசு அலுவலகத்தில் பணிபுரிகிறேன் என்றால் ஆமாம். போலீசார் என்னை விசாரணை செய்த போது நான் சம்பவ நடந்த இடத்திலிருந்து ஒரு கி.மீ தள்ளி இருந்ததாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் ஐயங்கார் பேக்கரியில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். புகாரை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். அது எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் மறுநாள் காலை காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். சம்பவம் நடந்த அன்று இரவு 9.30 மணிக்கு போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் ஆமாம். அவர்கள் விசாரணை செய்து என்னிடம் ஏதாவது கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். புகாரில் நான் வீட்டிலிருந்தபோது தகவல் தெரிந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான்

அப்போது வீட்டில் இல்லை. புகாரிலுள்ள விஷயங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் ஆமாம். விபத்துக்குள்ளாகி இறந்த நபர் என் தகப்பனார் என்பதால் பின்னிட்டு காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு காவல்துறையினர் சொன்ன வாசகங்களின் அடிப்படையில் இந்த புகார் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. புகாரில் சம்பவ இடத்திற்கு நான் வந்ததாகவும் அங்கிருந்து நான் 108 ஆம்புலன்சை வரவழைத்து அவருடன் மருத்துவமனைக்கு சென்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் நான் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்னரே 108 ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். காவல்துறையினர் சொன்னதின் அடிப்படையில் நான் புகார் எழுதியதால் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரிதான்.